சார்பு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.

முன்னிலை : திரு. சி.ராஜலிங்கம், பி.ஏ.,பி.எல்.,
சார்பு நீதிபதி, கள்ளக்குறிச்சி.

2020ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4ஆம் நாள் செவ்வாய்கிழமை.

அசல் வழக்கு எண்.1/2017

1. வெங்கடேசன்
2. தேவேந்திரன்
3. காசிவிஸ்வநாதன் ... வாதிகள்

/எதிர்/

1. ஆறுமுக செட்டியார்
2. சந்திரசேகரன்
3. ராமலிங்கஜோதி
4. பிரபு (எ) பிரபாகரன்
5. வத்சலா ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு 28.11.2019 அன்று விசாரணைக்கு வந்தபோது, வாதிக்காக வழக்கறிஞர் திரு. ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களும், 1ஆம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. எம்.தட்சணாமூர்த்தி அவர்களும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு. வி.ஆனந்தன் அவர்களும் ஆஜராகி வந்த இந்த வழக்கில், போதிய கால அவகாசம் அளித்தும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகளுக்காக யாதொரு பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், 5ஆம் பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்ட நிலையிலும், வாதிகள் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீ ர் ப் பு ரை</u>

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/8 பங்கு பாகத்தை நிர்ணயம் செய்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத்தொகைக்கும் வேண்டி இத்தாவா.

<u>2. வாதிகளின் வழக்குரை சுருக்கம் :</u>

தாவா சொத்துக்கள் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியமான பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களாகும் என்றும், இன்னமும் பாகம் பிரியாத பொது குடும்ப சொத்துக்களாக உள்ளதாகவும், 1ஆம் பிரதிவாதி ஆறுமுக செட்டியார் வாதிகளுக்கும், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தகப்பனார் ஆவார் என்றும், 1ஆம் பிரதிவாதி பூர்வீக சொத்தக்களை விற்று அதில் கிடைத்த வருவாயைக்கொண்டு சில சொத்துக்களை வாங்கியதாகவும், அவைகளுடன் மீதம் இருந்த பூர்வீக சொத்துக்களையும் சேர்த்து அவர் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து அனைவரும் கூட்டு உழைப்பில் வேண்டும் பயிர்செய்து கூட்டாக அனுபவம் செய்யப்பட்டு வருவதாகவும், தாவா சொத்துக்களில் அனைவருக்கும் சமபாக பாத்தியம் உள்ளதாகவும், அவ்வகையில் வாதிகளுக்கு 3/8 பாக பாத்தியம் உரிமை உள்ளதாகவும், பிரதிவாதிகளுக்கு தலா 1/8 பாக பாத்தியம் உரிமை உள்ளதாகவும், 1ஆம் பிரதிவாதிக்கு வயதாகிவிட்டதால் 2 முதல் 4 பிரதிவாதிகள் தவறான வகையில் பொய்யான காரணங்களை கூறி மனதை மாற்றி தாவா சொத்துக்கள்மீது அக்கரமலாபம் அடைவதற்காக போர்ஜரியான ஆவணங்களை ஜோடிக்கவும், வருவாய்த்துறை ஆவணங்களை திருத்தவும் 2 முதல் 4 பிரதிவாதிகள் முயற்சி செய்துவருவதாக தற்போது வாதிகளுக்கு தெரியவந்ததாகவும், பொதுக்குடும்ப நலனுக்கும், வாதிகளின் எதிர்கால நலனுக்கும் விரோதமாகவும் பிரதிவாதிகள் செயல்படுவதால் பலமுறை வாதிகள் பஞ்சாயத்தார்கள் மூலம் பிரதிவாதிகளிடம் நியாயம் கேட்டுப்பார்த்ததாகவும், ஆனால் பிரதிவாதிகள் ஒத்துழைக்கவில்லை என்றும், வாதிகள் பஞ்சாயத்தார்கள்

மூலம் பிரதிவாதிளிடம் தாவா சொத்துக்களில் தங்களுக்குரிய பாகத்தை பாகப்பிரிவினை செய்து கொடுக்கும்படி கடந்த 20.12.2016ல் நேரடியாக கேட்டதாகவும், அதற்கும் பிரதிவாதிகள் மறுத்துவிட்டதாகவும், 5ஆம் பிரதிவாதி வாதிகளுக்கும் ஆதரவு இல்லை, பிரதிவாதிகளுக்கும் ஆதரவு இல்லை அவர் பொதுப்படையாக உள்ளதாகவும், இருப்பினும் இவ்வழக்கில் அவர் அவசிய தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஆகவே, தாவா சொத்தில் வாதிகளுக்குரிய சட்டப்படியான 3/8 பாகத்தை பிரித்து ஒப்புக்கொடுக்கக் கோரி வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. போதிய கால அவகாசம் அளித்தும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகளுக்காக யாதொரு பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், 5ஆம் பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

<u>4. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில்,</u>

தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய 3/8 பாகம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>5. தீர்வு :</u>

இந்த வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக, தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய 3/8 பாகத்தை நிர்ணயம் செய்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வாதிகள் தரப்பில், 1ஆம் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, 1ஆம் வாதியின் தந்தை பெயரிலுள்ள கணினி பட்டாக்கள் எண்ணிக்கை -3

வா.சா.ஆ.1ஆக குறியிடப்பட்டுள்ளன.

7. இவ்வழக்கில் பிரதிவாதிகள் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வாதிகளின் வழக்கை மறுத்துரைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினர்களாக ஆகியுள்ளார்கள். பிரதிவாதிகளின் வருகையின்மை தாவாவில் வாதிகள் கோரிய பாகப்பிரிவினை குறித்து தீர்மானிக்க எவ்வித மறுப்பும் தெரிவிக்காத நிலையையே ஏற்படுத்துகிறது. எனவே, வாதிகள் முதல்நிலையில் தங்களது தரப்பு வழக்கை சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்மூலம் நிரூபித்துள்ள நிலையிலும், பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிகளின் வழக்கிற்கு எவ்வித முகாந்திரமும் தெரிவிக்காத நிலையிலும், வாதிகளின் பிராது, வா.சா.1-ன் சாட்சியம், மற்றும் சான்றாவணங்கள் மற்றும் பிரதிவாதிகளின் வருகையின்மையைக் கருத்திற்கொண்டு, வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, வாதிகள் தாவாவில் கோரியுள்ளபடி, வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/8 பாகம் உரிமை உள்ளது என நிர்ணயம் செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் செய்து தட்டச்சு செய்யப்பட்டதை, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2020ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/-.சி.ராஜலிங்கம்
சார்பு நீதிபதி,
கள்ளக்குறிச்சி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. வெங்கடேசன் |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | ... | 1ஆம் வாதியின் தந்தை பெயரிலுள்ள கணினி பட்டாக்கள் எண்ணிக்கை -3 |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**

... இல்லை ...

ஒம்/-.சி.ராஜலிங்கம்
சார்பு நீதிபதி,
கள்ளக்குறிச்சி.

செ.லோ.

-----------------------------------
சீரான/வரைவு தீர்ப்புரை
அ.வ.எண்.1/2017
நாள் - 04.02.2020 (சி1எ)
-----------------------------------